[2nd November 1962

திரு. வை. சங்கரன் : ஏற்கனவே இதுசம்பந்தமாக மத்திய அரசாங்கத்தார் தனியார் துறையில் அனல் மின்நிலையம் ஏற்படுத்துவதற்கு அனுமதி தர மறுத்தார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தத் திட்டத்தை ப்ளானிங் கமிஷன் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய சர்க்காரினுடைய தொழில் கொள்கை அடிப்படையில் மின்சார உற்பத்தி சர்க்கார் துறையில்தான் இருக்கவேண்டுமென்று முடிவுசெய்தார்கள்.

முந்திரிச்சாகுபடி

*1131 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் முந்திரிச் செடி பயிர் செய்வதற்காக எத்தனை ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டன?

(இ) அழிப்பதற்கு ஆன செலவு என்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டத்தில் முந்திரிச் செடிகளைப் பயிரிடுவதற்காகக் காடுகள் அழிக்கப்படவில்லை. ஆனால், முந்திரிச் செடிகளை நடுவதற்கு முன் இம்மாவட்டத்திலுள்ள அழிந்துபோன முன்னாள் ஜமீந்தாரிக் காடுகளிலுள்ள புதர்களும், தரம் குறைந்த சிறு மரங்களும் அகற்றப்படுகின்றன.

*1132 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை ஏக்கர்களில் முந்திரிச் செடி உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது?

(இ) சென்ற ஆண்டில் அதற்கான செலவென்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) விவசாய இலாகாவால் நிறைவேற்றப்பட்டுவரும் முந்திரி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் 73 ஏக்கர் நிலம் முந்திரிச் சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் காட்டு இலாகாவால் நடத்தப்பட்டுவரும் ஒரு திட்டத்தின்கீழ் 4,301 ஏக்கரா காட்டு நிலம் முந்திரிச் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

(இ) விவசாய இலாகாவால் நிறைவேற்றப்பட்டுவரும் திட்டத்தின் கீழ் 1961-62-ம் ஆண்டில் விவசாயிகளுக்கு கடனாக ரூ. 5,860 அளிக்கப்பட்டது.

1961-62-ல் காட்டு இலாகாவால் ரூ. 71,605 முந்திரி பயிருக்காகச் செலவழிக்கப்பட்டுள்ளது.

2nd November 1962]

திரு. கரு. சீமைச்சாமி: இராமநாதபுரத்தில் ஏராளமான ஏக்கரா தரிசு நிலங்கள் இருப்பதால் அந்தப் பகுதியில் முந்திரி அதிகம் பயிரிடும் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: கிழக்கு இராமநாதபுரத்தில், சிலோனில் இருந்து வந்தவர்களுக்கு உதவி செய்வதற்காக ஏற்பாடு செய்யும் முறையில் முந்திரி பயிர் வைக்கும் திட்டத்தை எடுத்துக் கொண்டோம். எங்கெல்லாம் இன்னும் வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் ஏற்படுத்தப்படும்.

* *1133* **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முந்திரி ஏற்றுமதிக் கவுன்சில் திட்டப்படி தென்னாற்காடு மாவட்டத்தில் எவ்வளவு விஸ்தீரணத்தில் புதிதாக முந்திரி பயிரிடப்பட்டது?

(இ) அந்தப் பகுதியில் முந்திரிக்கு நோய் ஏற்பட்டு காய்க்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(உ) அதற்கான காரணமும், தடுப்பு நடவடிக்கையும் என்ன?

THE HON. SRI P. KAKKAN : (அ) & (உ) A paper [a] is placed on the Table of the House.

* *1134* **கேள்வி.—திரு. முனு. ஆதி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வண்டலூரில் முந்திரி பயிரிடுதல் பற்றி ஆராய்ச்சி நடத்த ஒரு ஆராய்ச்சி கேந்திரம் நிறுவப்பட்டுள்ளதா? விவரமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: ஆம், ஐயா.

இந்த ஆராய்ச்சிக் கேந்திரத்தில் நடத்தப்படும் ஆராய்ச்சிகள் பின்வருமாறு—

மிகச் சிறந்த முறை, காலம், செடிகளை இடைவெளி விட்டு நடும் முறை, முந்திரி பயிர் செய்வதற்கு தகுந்தாற்போல் மண்ணை வளப்படுத்தும் பல்வேறு முறைகள், வண்டலூரில் முந்திரிச் செடிகளின் உரத் தேவைகள், உயர்ந்த ரக விதைகளைத் தயாரித்தல் முதலிய ஆராய்ச்சிகள்.

**1135* *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to start a pilot project for cashew cultivation in Ramanathapuram district; and

(*b*) if so, the details thereof?

---

a Printed as Appendix V on page 520—521